DEPOSITION OF WITNESS
In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.
CC. No.80 of 2016
List of witness/Prosecution witness : LW-1 /PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. ஜமாலுதீன் | Caste | : | |
| Fathers Name | : | திரு. தாவூத் | Calling | : | |
| Village | : | ஊத்துக்கோட்டை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 43 |

(Accused called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2025.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை நேரம் 2.55

1. நான் கறிக்கடை வைத்து வியாபாரம் செய்து வருகின்றேன். சுமார் 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக கடை வைத்து வருகின்றேன்.

2. நான் காலை 6 மணி முதல் மாலை 5 மணி வரை இருக்கும். ஒரு சில நாளில் காலை 12 மணிக்கு முடிந்து விடும். ஞாயிற்றுகிழமை அதிக நேரம் இருக்கும்.

3. சம்பவம் அன்று என்ன கிழமை என்றால் ஞாயிற்றுக்கிழமை.

4. நான் அளித்த புகாரில் எந்த பதிவு எண் கொண்ட வாகனத்தில் நான் சென்றேன் என்று அந்த புகாரில் குறிபிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. சம்பவம் நடைபெற்ற அன்று என்ன வேலையாக சென்றீர்கள் என்றால் ஆடு எடுத்து வருவதற்காக சென்றேன். ஆடு எடுக்க செல்லும்போது நான் மட்டும் சென்றானே அல்லது என்னுடன் யாரும் வந்தார்களா என்றால் என்னுடன் ஆனந்தன் என்பவர் என்னுடன் வந்தார்.

6. நான் முதன்மை சாட்சியத்தில் சாட்சியம் அளிக்கும் போது பஸ்கர் வந்தார் என்று சாட்சியம் அளித்துவிட்டு தற்போது ஆனந்த் என்பவர் வந்ததாக சாட்சியம அளித்துள்ளேன் என்றால் ஆனந்த் தான் வந்தார்.

7. வழக்கில் இறந்து போனவர் என்ன வேலை செய்து வருகின்றார் என்றால் இரும்பு வியாபரக் கடையில் வேலை செய்து வந்தார்.

8. எனது கடைக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே உள்ள தூரம் எவ்வளவு இருக்கும் என்றால் ஒன்று அல்லது இரண்டு கிலோ மீட்டர் இருக்கும்.

9. நான் வாகனம் ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். எனது வாகனத்திற்கும் எனது முன்னால் சென்ற வாகனத்திற்கும் இடையே உள்ள தூரம் நூறு அல்லது 150 மீட்டர் இருக்கும்.

10. விபத்து ஏற்படுத்திய வாகனமானது என்னை தாண்டிச் சென்று தான் விபத்து ஏற்பட்டது என்றால் இல்லை எதிர் பாக்கமாக தான் விபத்து ஏற்படுத்திய வாகனம் வந்தது.

11. விபத்து ஏற்பட்ட இடம் எந்த இடம் என்றால் பேருந்து நிலையம் இருந்தது. சுற்றிலும் என்ன உள்ளது என்றால் கழனி மட்டும் இருந்தது.

12. சம்பவம் குறித்து 108 ஆம்புலன்ஸ் யார் தகவல் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

13.விபத்தில் இறந்து போனது குறித்து யாருக்கு தகவல் கூறினீர்கள் என்றால் அவருடன் வேலை செய்கின்ற நபர்களான திரு.பாபு மற்றும் அப்புன் பிரேம் ஆனந்த் ஆகியோர்களுக்கு தகவல் கூறினேன்.

14. விபத்து நடந்த இடத்திற்கு போலீசார் எப்போது வந்தார்கள் என்றால் மதியம் சுமார் 1.00 மணி முதல் 1.300 மணி இருக்கலாம்.

15. அவரது வீட்டிற்கு எதாவது தகவல் கூறினீர்களா என்றால் அவருடன் உடன் வந்தவர்கள் தகவல் கூறினார்கள்.

16. இறந்து போன நபரை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் எனப்பு பழக்கமானவர்.

17. விபத்தில் இறந்து போன நபரை எத்ததனை ஆண்டுகள் தெரியும் என்றால் நான்கு அல்லது ஐந்து ஆண்டுகள் வரை தெரியும்.

18. சம்பவயிடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் சுமார் 20 நிமிடம் வரை இருந்தேன்.

19. விபத்து நடந்த இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் நிறை நபர்கள் இருந்தார்கள்.

20. நான் புகாரிலும் மற்றும் முதன்மை விசாரணையில் கார் ஓட்டுநர் ஓடிவிட்டார் என்று சாட்சியம் அளித்துள்ளீர்களே அவர்கள் ஓட்டுநர் ஓடியதை பார்த்தீர்களா என்றால் நான் பார்க்கவில்லை.

21. விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவு எண் எழுதிய தகடு எந்த நிறத்தில் இருந்தது என்றால் வெள்ளை நிறத்தில் ஆனா தகடுகளில் எழுதப்பட்டு இருந்தது.

22. இந்த வழக்கின் புகார் யாரால் எழுதப்பட்டது என்றால் என் உடன் வந்த நபர் ஒருவர் எழுதினார். அவர் பெயர் தெரியுமா என்றால் எனக்கு பெயர் தெரியாது.

23.புகார் எந்த தேதி எத்தனை மணிக்கு யாரிடம் கொடுத்தீர்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

24. நான் அளித்த புகாரில் எந்த இடத்தில் கையொப்பம் செய்ய வேண்டும் என்று குறியீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த இடத்தில் தான் கையொப்பம் செய்தேன் என்றால்

சரிதான்.

25.இந்த புகாரில் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது.

26.இந்த வழக்கு குறித்து போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.இந்த வழக்கு குறித்து ஞாபகம் இல்லை என்றால் அதிக நாட்கள் ஆனதால் ஞாபகம் இல்லை என்றால் சுமாராகத்தான் ஞாபகம் உள்ளது.

27. எனது வாகனத்தில் எவ்வளவு வேகமாக சென்றேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவர் எவ்வளவு வேகமாக வந்தார்கள் என்றால் அது குறித்தும் எனக்கு ஞாபகம் இல்லை.

28. நான் கூறுவது போல் விபத்து அந்த இடத்தில் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

29. விபத்தல் இறந்து போன நபர்தான் அதிவேகமாக சென்று அடையாளம் தெரியத வாகனத்தினால் மோதி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

30. விபத்தில் இறந்து போன நபர் எனது நண்பர் என்பதால் தான் விபத்தில் இறந்து போனதாக பொய் புகார் அளித்தேன் என்றால் இல்லை.

31. சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், காவல் துறையால் ஒரு பொய்யான புகாரைப் பெற்று உள்ளார்கள் என்றால் சரியல்ல.

32. விபத்து ஏற்படுத்திய வாகனம் எந்த வாகனம் என்று தெரியவில்லை என்றாலும், அன்றைய தினம் அந்த வழியாக வந்த வாகனம் ஒன்றை குறிப்பிட்டு பொய்யான புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

33.நான் கூறுவது போல் விபத்திற்கும் எதிரியின் வாகனத்திற்கும் எந்த விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

34. நான் பார்த்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

35. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும், விபத்தில் இறந்து போன நபர் விபத்து காப்பீடு பெறவேண்டும் என்பதாற்காக பொய்யான ஒரு புகார் கொடுத்து அதற்கு அனுகூலமாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம்: 3.30

DEPOSITION OF WITNESS

In the Court of District Munsif Cum Judicial Magistrate Court, Uthukottai.

CC. No.80 of 2016

List of witness/Prosecution witness : LW-8 /PW-2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு. பாஸ்கர் | Caste | : | |
| Fathers Name | : | திரு. ஜோயல் மதன் | Calling | : | |
| Village | : | ஊத்துக்கோட்டை | Religion | : | |
| Taluk | : | | Age | : | 46 |

(Accused called present)

solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.01.2025.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை நேரம் 3.35

01. இந்த விபத்து நடந்தது எனக்கு நேரிமையாக தெரியுமா என்றால் எனக்கு தெரியாது மற்றவர்கள் சொல்லிதான் எனக்கு தெரியும்.

02. போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள்.

03. நான் முதல் விகாரணையின் போது விபத்து ஏற்படுத்திய வாகனம் சம்பவயிடத்தில் நின்றுக் கொண்டு இருந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சங்கதிகளை போலீசார் விசாரணையின் போது கூறீனீர்களா என்றால் கூறினேன்.

04. நான் போலீசார் விசாரணையின் போது சொல்லவில்லை என்றாலும் இந்த நீதிமன்றத்தின் விசாரணையின் போது தான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை

சாட்சியம் முடிவுற்ற நேரம்: 3.30